Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 258/2022
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 05 , Page.No. 24/26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கருணாநிதி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. பெரியசாமி | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | ஜோலார்பேட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 57 |
| எதிரி ஆஜர் | | | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 22th day of June 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**அ.சா.5 திரு. கருணாநிதி முதல் விசாரணை**</u>

1. நான் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2020 ம் வருடம் எங்கள் காவல் நிலையத்த்ல் உதவி ஆய்வளராக பணியாற்றி திரு. முகமதுர்பான் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.09.2020 அன்று உதவி ஆய்வாளர் திரு. முகமதுர்பான் நிலைய பொறுப்பில் இருந்த போது காமராஜபுரம் கிராமத்தை சேர்ந்த கோவிந்தன் மகன் அனுமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய மனு எண். 913/2020 வழங்கப்பட்டு முதற்கட்ட விசாரணை முடித்து 10.10.2020 அன்று நிலைய குற்ற எண். 579/2020 இதச பிரிவுகள் 294(பி), 427 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். (**அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் 11.10.2020 காலை 06.30 மணிக்கு சம்பவ இடம்

சென்று சாட்சிகள் முருகன் , திருப்பதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தேன். (**அவை முறையே என்னால் அ.சா.ஆ.3, 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 427 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நிலைய மனு எண் வழங்கி 20 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் ஆனது தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். புகாரில் தேதி மட்டும் பேனாவால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிலைய மனு எண் ஆனது 21.09.2020 அன்று காலை 10.00 மணிக்கு வழங்கபட்டதாக எழுதப்பட்டு பின்பு திருத்தம் செய்யப்பட்டு இரவு என்ற வார்த்தை இடைசொற்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 21.09.2020 அன்று மாலை 4.00 மணிக்கு சம்பவம் நடந்ததால் காலை 10.00 மணிக்கு புகார் அளிக்க வாய்ப்பில்லை என்றாலும், எனவே பொய்புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பது புலப்படுகிறது என்றாலும் அதை மறைக்க வேண்டி காலை என்பது அடித்து இரவு என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் புகார்தாரருக்கு சொந்தமானது என்பதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேதம் செய்யப்பட்ட பொருட்களின் விலை மற்றும் எதனால் சேதம் செய்யப்பட்டது என்ற விவரத்தையும் குறிப்பிட்டு புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யவில்லை என்றாலும் புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் சேதப்படுத்த பயன்படுத்தியதாக கூறப்படும் JCB வாகனத்தின் ஓட்டுநரை விசாரித்திருப்பார் என்றாலும், சேதம் ஆன பொருட்களின் விலைசான்றை தாக்கல் செய்திருப்பார் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் சம்பவ இடத்தில் பயிர் செய்து வருகிறார் என்பதை

நிரூபணம் செய்ய அந்த வருடத்திற்கு உண்டான அடங்கல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டி கொடுக்கப்பட்ட பொய்புகாரை புலன் விசாரணை அதிகாரி சரியாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**// உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Judicial Magistrate No.1 Thirupattur

**நீதித்துறை நடுவர் எண்.1**

**திருப்பத்தூர்**